## ஒதுக்கீட்டு தலைப்பு 258 - மாவட்ட செயலகம், கண்டி

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை - 2012 ஆம் ஆண்டு

### 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

(அ) மாவட்ட நிர்வாகம்

(ஆ) சட்டவாக்க நடவடிக்கைகள்

(இ) உள்ளகக் கட்டுப்பாட்டினை பலப்படுத்தல்

(ஈ) மதசார் மற்றும் ஒழுக்க மேம்பாடுகள்

(உ) ஊழியர் நலன்புரி

(ஊ) ஒருங்கிணைத்தலும் நட்புரீதியான நிர்வாகமும்

(எ) அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் கம நெகும

(ஏ) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூகப் பங்களிப்பு

(ஐ) ஊடக ஒருங்கிணைப்பு

(ஒ) நிர்வாகக் கொள்கை அபிவிருத்தி மற்றும் பயிற்சி

(ஓ) தகவல் தொழிநுட்பப் பயன்பாடு

### 1.2 மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) கங்கவட்ட கோரளை

(ஆ) பாத்தஹேவாஹட்ட

(இ) தெல்தோட்டை

(ஈ) உடபலாத்த

(உ) உடதும்பர

(ஊ) பாத்ததும்பர

(எ) பன்வில

(ஏ) ஹத்தரலியத்த

(ஐ) பூஜாபிட்டிய

(ஒ) தும்பனே

(ஓ) மினிப்பே

(ஔ) குண்டசாலை

(ஃ) தொலுவ

(க்) கங்க இஹல கோரளை

(கா) யட்டிநுவர

(கி) உடுநுவர

(கீ) ஹாரிஸ்பத்துவ

(கு) அகுரணை

(கூ) மெத்ததும்பர

(கெ) பஸ்பாகே கோரளை

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

கண்டி மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 04 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன (அ) முதல் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.6 முதல் 1.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினங்களும்

மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,031,282,164 தொகையாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 976,567,133 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேமிப்புக்கள் ரூபா 54,715,031 ஆக இருந்ததுடன், அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 5.3 சதவீதத்தைக் கொண்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினத்தின் தன்மை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாதீட்டு நிதிஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதிஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்புக்கள் | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 638,025,000 | 905,082,164 | 1,316,320 | 0.1 |
| மூலதனம் | 86,200,000 | 126,200,000 | 53,398,711 | 42.3 |
| மொத்தம் | 724,225,000 | 1,031,282,164 | 54,715,031 | |

**(ii) பாதீட்டு முரண்**

06 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவினங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து 14 சதவீதம் முதல் 47 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

**(iii) நடைமுறையல்லாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(ஏ) மீண்டுவரும் செலவின விடயங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 34,425 பெறுமதியான நிலையான சொத்துக்கள், ஒதுக்கீட்டுக் கணக்கின் நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(பி) மாவட்ட செயலகத்தினாலும் 20 பிரதேச செயலகங்களினாலும் பயன்படுத்தப்படுகின்ற 48 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(iv) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 27 அமைச்சுக்களால் ரூபா 3,596,846,981 மற்றும் 14 திணைக்களங்களினால் ரூபா 1,827,816,544 ஏற்பாடாக ரூபா 5,424,663,525 ஆன ஏற்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் முறையே ரூபா 3,274,503,452 மற்றும் ரூபா 1,509,532,104 பயன்படுத்தப்பட்டிருந்தன. சேமிப்புக்கள் ரூபா 322,343,529 மற்றும் ரூபா 318,284,440 அல்லது 9% மற்றும் 17% ஆக இருந்தன.

**(ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

25801 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பாக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 76,500,000 | 66,391,677 | 53,000,000 | 68,035,966 | 198,000,000 | 189,393,999 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 25801 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் ரூபா 3,628,855 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 உப பிரிவின் பிரகாரம் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை பிரதான கடன்காரரிடமிருந்து அறவிடப்பட முடியாத சந்தர்ப்பத்தில் அக்கடன் தொகையை பிணையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதான கடனாளியிடமிருந்து அறவிட முடியாமல் போன ரூபா 1,133,396 ஆன 15 கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை பிரதான கடன்காரரிடமிருந்து அறவிடப்பட முடியாத சந்தர்ப்பத்தில் பிணையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 உப பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக ரூபா 67,285 ஆன 04 கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்படாது காணப்பட்டது.

(iv) இறந்த மற்றும் இளைப்பாறிய உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாகவிருந்த கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.2.3, 4.2.4 மற்றும் 4.4 பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக அவ்வாறான 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 277,290 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(v) 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளரின் வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச்சென்று 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 801,946 ஆன கடன் மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கக்கூடிய ஆகக்கூடிய கடன் தொகை ரூபா 250,000 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையை மிகைத்து பிரதேச செயலாளர் ஒருவருக்கு ரூபா 51,623 ஆன முற்பணம் 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 210,348,462 ஆகும். விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்கிலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/34 | 210,348,462 |

## 1.6 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாமலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமையும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் நிதிகளின் கீழ் பன்வில பிரதேச செயலக வளவில் 2008 ஆம் ஆண்டில் ரூபா 1,328,008 செலவு செய்யப்பட்டு தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு தினமான 2013 மார்ச் 25 ஆம் திகதி வரையில் 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அந்த அலுவலகம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உடதும்பர பிரதேச செயலகக் கட்டிடத்தில் பதிவாளர் நாயகத்தின் அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்ட 1505 சதுர அடி அளவிலான அலுவலகம் எவ்வித நோக்கங்களிற்கும் பயன்படுத்தப்படாமல் 12 ஆண்டு காலமாக மூடப்பட்டிருந்தது.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

மாவட்ட செயலகத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித் தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) கண்டி யட்டிநுவர வீதியின் 71 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மேலதிக மாவட்ட செயலாளருக்கான அரச விடுதி 2003 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் இலங்கை தரைப்படை பொலிஸ் சேவை அதிரடிப்படையின் பாவனைக்காக 06 மாதங்களுக்கு மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்விடுதி 2013 திசெம்பர் மாதம் வரையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாத்ததும்பர பிரசேத செயலக வளவில் அமைந்துள்ள 03 கட்டிடங்கள் வியாபார நடவடிக்கைகளுக்காக வெளித்தரப்பினருக்கு உடன்படிக்கையொன்று மேற்கொள்ளாமல் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அக்கட்டிடங்களுக்காக எந்தவொரு குத்தகை வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) உடமையாக்கப்பட்டிருக்காத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பாத்தஹேவாஹட்ட பிரதேச செயலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட 229 அத்துமீறிய காணித் துண்டுகளுக்குரிய உரித்தைப் பெற்றுக்கொள்ளல், பொறுப்பளித்தல் அல்லது தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) உடுநுவர பிரதேச செயலகத்திற்குரிய வெலிகல்ல கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள 0.1782 ஹெக்டேயார் அளவிலான இம்புல்தாகொடவத்த காணி 1983 ஆம் ஆண்டின் போது அரசிற்கு பொறுப்பேற்கப்பட்டு 2285 சதுர அடி அளவிலான இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இக்காணியில் அத்துமீறி அரசியல் கட்சியொன்றின் இணைப்பு அலுவலகமொன்று நடாத்திச் செல்லப்பட்டு வருகின்றது.

(iii) 1961 இன் 60, 1964 இன் 5, 1964 இன் 28 மற்றும் 1979 இன் 8 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களினால் திருத்தப்பட்ட காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் இழப்பீட்டுத் தொகை சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரமும் உரித்தைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் உடுநுவர பிரதேச செயலகத்தினால் உரித்தைப் பொறுப்பேற்றதன் பின்னர் பல வருடங்களுக்குப் பின்னர் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தியமையால் உரித்தைப் பொறுப்பேற்ற திகதியிலிருந்து பணத்தை வழங்கிய திகதி வரை இழப்பீட்டுக்கு மேலதிகமாக 45 காணித் துண்டுகளுக்காக ரூபா 1,468,995 வட்டியாக செலுத்த நேர்ந்திருந்தது.

**(ஈ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள்**

மாவட்ட செயலகத்தினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 1,151,053 ஆக இருந்ததுடன், அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| 01 ஆண்டிற்கு கீழ் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| ரூபா | ரூபா |
| 1,151,053 | 1,151,053 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ரூபா 140,596 ஆன பொறுப்புக்கள் கணக்கின் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 07 செலவின விடயங்களுக்குரிய பொறுப்புக்கள் ஆண்டின் போது தீர்வு செய்யப்பட்டிருந்தால் ரூபா 1,297,179 மிகை ஏற்பாடாக இருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) ''எதிர்பார்த்த அளவினை விட செலவினம் குறைந்து காணப்பட்டமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது'' என குறிப்பிடப்பட்ட 02 செலவின விடயங்களின் ரூபா 30,500 ஆன நிதிஏற்பாட்டை வேறு செலவின விடயமொன்றின் மிகை செலவினத்தை ஈடுசெய்வதற்காக மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அச்செலவின விடயங்கள் இரண்டின் கீழ் ரூபா 93,504 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.8 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) **தாபன விதிக்கோவை** | | |
| **xv ஆம் அத்தியாயத்தின்** | | |
| (i) 4.1. ஆம் பிரிவு | - | மாவட்ட செயலகத்திற்குரிய உத்தியோகத்தர் ஒருவர் 2012 யூன் 02 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 24 ஆம் திகதி வரையான 54 நாட்களுக்காக சம்பளத்துடன் கூடிய பயிற்சி பாடநெறியொன்றிற்காக இந்தியாவுக்கு சென்றிருந்த போதிலும், அவரது கட்டாய சேவைக் காலத்திற்காக உடன்படிக்கை யொன்றுக்கு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.6 ஆம் பிரிவு | 78,738 | உஷ்ண ஆடைக்கான படியாகப் பெற்றுக்கொண்ட பணத்தை வெளிநாட்டில் தங்கியிருப்பதற்காக தமக்குத் தேவையான ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்காக செலவழித்ததாக சான்றுப்படுத்துவதற்கு |

உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டின் போது 5 உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட ஆடைகளுக்காக அவ்வாறான சான்றிதழ் அல்லது பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், 5 ஆண்டு காலப்பகுதியிற்கு படியை ஒரு முறை மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளமைக்காக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியவில்லை.

(ii) **நிதிப் பிரமாணம்**

நி.பி 880

05 பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள 111 கிராம சேவையாளர்களால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) **பொது நிர்வாக சுற்றறிக்கை**

2012 நவம்பர் 17 ஆம் திகதிய HAF -3- ADMIN-04-002 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் கடிதத்தின் 06 ஆம் பந்தி

கிராம சேவையாளர்கள் உரிய பிரிவுகளில் குடியிருக்க வேண்டிய போதிலும், 131 கிராம சேவையாளர்களால் அந்நியதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) **ஏனைய சுற்றறிக்கை**

2011/1 ஆம் இலக்க சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டுகை அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை

முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கு ஒரு கோப்பை பசும் பால் வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் உடுநுவர பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 125 கிராம சேவையாளர் பிரிவுகளில் இந்நிகழ்ச்சித் திட்டம், 21 பிரிவுகளில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| 2006 யூலை 31 ஆம் திகதிய 153,000 21 ஆம் இலக்க சமூர்த்தி ஆணையாளர் நாயகத்தின் போசனை கொடுப்பனவு சுற்றறிக்கை | கர்ப்பினி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 20 மாதங்களுக்காக ரூபா 500 வீதம் ஊட்டச்சத்து கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையிள் பிரகரம் உடுநுவர பிரதேச செயலகத்தினால் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்காததன் காரணமாக மீளாய்வாண்டின் போது 125 கிராம சேவையாளர் பிரிவுகளில் 60 பிரிவுகளின் 120 தாய்மார்களுக்கு மாத்திரம் ஊட்டச்சத்துக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. மேலும் அந்த தாய்மார்களுக்கு ரூபா 153,000 பெறுமதியான 306 முத்திரைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அம்முத்திரைகள் காலாவதியாகியிருந்தன. |

## 1.9 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடுதல், செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடுதல்

மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| பிரதேச செயலகம் | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| உடபலாத்த | இலங்கஹுவத்த முன் பள்ளி பாடசாலை புனரமைப்பு | 980,000 | 2012.12.11 | தொழிநுட்ப அதிகாரிகளுக்கு அதிகளவு வேலைப்பளு காரணமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| கலகெதர | கஹல்பிட்டிய பிரிவின் பலிபான தோட்டத்திற்கு செல்லும் வீதியை அபிவிருத்தி செய்தல் | 980,000 | - | காணி சிக்கல் காரணமாக உத்தேசிக்கப்பட்டவை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அங்கீகரித்துக் கொள்ள முடியாதிருந்தமை. |
| பாத்தஹேவா ஹட்ட | ஹிப்பொலகம மெத்த வீதியை அபிவிருத்தி செய்தல் | 974,000 | - | திருத்தம் அங்கீகரிக்க தவறியமை |
| | தலாத்துஓயா போதிராஜராம விஹாரைக்கு அருகில் மாற்று பாதை அபிவிருத்தி செய்தல் | 974,000 | - | - மேற்படி - |
| | நுகலியத்த தம்பகஹதன்ன வீதி | 974,000 | - | - மேற்படி - |
| | வேலேகம நீர் வழங்கல் திட்டத்தை அபிவிருத்தி செய்தல | 974,000 | - | - மேற்படி - |
| யட்டிநுவர | பானபொக்க பெரிய கிணற்றுக்கு அருகே செல்லும் வீதி | 1,000,000 | 2012 .04.15 | திருத்தம் அங்கீகரிக்க தவறியமை |

| | | | |
|---|---|---|---|
| கடுகண்ணாவ நீர் வழங்கல் திட்டம் | 1,000,000 | 2012 .04.15 | ஏற்பாடு கிடைக்கப் பெற்றுள்ள பிரிவுக்கு அவ்வாறான திட்ட மொன்றுக்கான தேவை ஏற்படாமை. |
| தெஹியங்க பல்நோக்கு நிலைய நிர்மாணம் | 1,000,000 | 2012 .04.15 | திருத்தங்கள்˙ அனுமதிக் கப்படாமை |

**(ஆ) செயற்திட்டத்தைப் அமுலாக்குவதில் தாமதம்**

மாவட்ட செயலகத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்களை அமுலாக்குவதில் தாமதம் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 வரை செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| <u>மினிப்பே</u> | | | | | |
| வெரகஹங் தொட்ட நீர் வழங்கல் திட்ட நிர்மாணம் 1 ஆம் கட்டம் | 1,000,000 | 2012.07.10 | 2012.12.31 | 286,155 | சீரற்ற காலநிலைமை காணப்பட்டமை |
| <u>உடபலாத்த</u> 20/22/Kan மஹவில ஸ்ரீ முருகன் கோவிலின் புனர்நிர்மாணம் | 48,500 | - | - | - | காலம் போதியதாக இன்மை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஹத்தரலியத்த<br>உடந்தாதெனிய நீர் வழங்கல் திட்டம் | 989,422 | 2012.11.14 | 2013.06.30 | 196,000 | சீரற்ற காலநிலைமை காரணமாக நிர்மாண நடவடிக்கைககள் தடைப்பட்டமை |
| யட்டிநுவர<br>முதலிவத்த வீதி 1 ஆம் குறுக்கு வீதி புனமைத்தல் | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | - | - மேற்படி - |
| தியகெலிநாவ ரஜமஹா விஹாரைக்கு செல்லும் வீதி மற்றும் பாலம் நிர்மாணம் | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | 170,730 | - மேற்படி - |
| விஹார மாவத்தைக்கு கொங்கிரீட் இடல் | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | 217,778 | - மேற்படி - |
| சியம்பலா கொடை சனசமூக நிலையத்திற்கு கட்டிடமொன்று நிர்மாணித்தல் | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | 860,953 | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கோயிலுக்கு அருகாமையிலிருந்து பிரைம்லான்ட் தோட்டத்திற்கு கொங்கிரீட் பரப்பி சுவர் நிர்மாணிப்பு | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | 559,648 | சீரற்ற காலநிலைமை காணப்பட்டமை |
| சமநல உயன வீதி வடிகாலுடன் கொங்கிரீட் இடல் | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | - | - மேற்படி - |
| உடவெல ஆரம்ப பாடசாலைக்கு அருகில் மக்கள் கிராமம் வரை செல்லும் வீதியை புதுப்பித்தல் | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | - | - மேற்படி - |
| குருந்துவத்த பலநோக்கு மண்டபத்தை புதுப்பித்தல் | 980,000 | 2012.04.05 | 2012.12.31 | 679,812 | - மேற்படி - |
| வெரலுகொல்லவில் இருந்து மொரகொல்ல சனசமூக நிலையம் வரையான நுழைவு வீதி புதுப்பித்தல் | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | 217,778 | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரனவனயிலிருந்து பரம்மனே ஊடாக சந்திப்பொல வரை வீதி அபிவிருத்தி | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | - | - மேற்படி - |
| தெஹிஅங்க மெத்த பலாத்த விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல் | 980,000 | 2012.04.15 | 2012.12.31 | - | - மேற்படி - |

**1.10 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுடையதாக காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) இலங்கை திட்டமிடல் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு மிகை ஊழியர் அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள 14 அபிவிருத்தி உதவியாளர்கள் கண்டி மாவட்ட செயலகத்திற்கு இணைக்கப்பட்டு சேவை புரிந்து வருவதுடன், அந்த ஊழியர்களுக்குரிய நியமனக் கடிதத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் ‘‘பட்டியல்படுத்தப்பட்ட பதவிகளுக்கு வழங்கப்பட்டுள்ள போன்றவை இல்லாமல் செலுத்தப்படும் சம்பளத்திற்கு மாத்திரம் உரித்துள்ளது’’ எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டில் மேற்படி ஏற்பாடுகளுக்கு முரணாக அவர்களுக்கான தொலைபேசிப் பட்டியல்களுக்காக மொத்தம் ரூபா 295,057 அரச நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்ட செயலாளர் குடியிருக்கும் உத்தியோகபூர்வ விடுதியின் துண்டிக்கப்பட்டுள்ள தொலைபேசிக்குரிய ரூபா 56,083 ஆன நிலுவை தொலைபேசிக் கட்டணத்தை அறவிடுவதற்காக உரிய நடைமுறைகளைப் பின்பற்றாத காரணத்தால் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிலுவை கட்டணத்தை இளைப்பாறிய மாவட்ட செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதற்குப் பதிலாக அவ்விடுதிக்கு புதிய தொலைபேசியொன்று பொருத்தப்பட்டிருந்தது.

## 1.11 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

2010 மே 30 ஆம் திகதி பூஜாப்பிட்டிய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான வாகனமொன்று விபத்திற்குட்பட்டிருந்ததுடன், ஏற்பட்ட மொத்த நட்டமான ரூபா 40,312 இல் 60 சதவீதம் அல்லது ரூபா 24,187 ஐ பூஜாப்பிட்டிய பிரதேச செயலாளரிடம் இருந்து அறவிடுமாறு பொது நிர்வாக அமைச்சு செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும், கணக்காய்வு திகதியான 2012 ஒக்தோபர் 17 ஆம் திகதி வரையில் மேற்படி விபத்து காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 40,312 ஆன நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையிடமிருந்து பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலகத்திற்குரிய கந்தே சந்தியின் கிராமத்திற்கான தண்ணீர் கோபுரத்தினை நிர்மாணிப்பதற்கு 20 பேர்சர்ஸ் அளவிலான காணித் துண்டொன்றை கையேற்கும் பொருட்டு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1,448,286 ஆன இழப்பீட்டுத் தொகை பயன்படுத்தி உரிய செயற்பாட்டை மேற்கொள்ளாமல் 2009 ஆம் ஆண்டிலிருந்து அப்பணம் பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டு வந்தது.

**1.13 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை வருமாறு

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 82 | 73 | 09 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 46 | 62 | - | 16 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1822 | 1409 | 413 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 230 | 204 | 26 | |
| (v) | ஏனையவை(அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படையில்) | 05 | 12 | 07 | |
| | மொத்தம் | 2185 | 1760 | 455 | 16 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

உடுநுவர பிரதேச செயலகத்தினால் மத்திய அரசில் சேவை புரிவதற்கு விருப்பம் தெரிவிக்காத மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் நியமனத்தின் கீழ் சேவை புரியும் இரண்டு மாகாண சபை ஊழியர்களுக்காக 2012 ஆம் ஆண்டில் மத்திய அரசின் ஏற்பாடுகளிலிருந்து சம்பளமாக ரூபா 2,424,791 தொகையும் இடர் கடனாக ரூபா 126,680 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.